Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 121/2024** |
| Deposition of witness for | :: | **DW. 1** |
| Name | :: | **மகேஷ்வரன்** |
| Father's Name | :: | காளிதாஸ் |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**புகார்தாரர் ஆஜர் இல்லை. பிரிவு 279 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 355 BNSS குவிமுச வின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. இருதரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர். எதிரி தரப்பில் 353 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு Crl MP. 673/2025 அனுமதிக்கப்பட்டு எதிரி தரப்பில் சாட்சி விசாரிக்கப்படுகிறார்.**

**23.03.2026**

**முதல் விசாரணை**:

1. எனது மனைவி தான் இவ்வழக்கின் எதிரி ஆவார். எனது மனைவி Sri Vishnu Yarns என்ற நிறுவனத்தை நடத்தி வருகிறார். கடந்த இரண்டு வருடத்திற்கு முன்பு இவ்வழக்கின் புகார்தாரான பிரேம் சுப்பாராஜ் என்பவர் எனதுமனைவி நடத்தும் நிறுவனத்திற்கு வந்து தொழில் ரீதியாக ஒப்பந்தம் ஏற்படுத்தி கொள்ளலாம் என்று எனதுமனைவியிடம் கேட்டார். அதனை தொடர்ந்து எனது மனைவியும் இவ்வழக்கின் புகார்தாரரும் ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்தி கொண்டார்கள். அதில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன். அதன்பிறகு 3 மாதத்தில் எனதுமனைவி அவர் மீது காசோலை வழக்கு தாக்கல் செய்திருப்பதாக என்னிடம் தகவல் கூறினார். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் புசாஆ.7 ல் உள்ள மகேஷ்வரன் என்ற சாட்சி கையெழுத்து என்னுடையது தான்.

மேற்படி ஆவணத்தில் என்ன ஒப்பந்தம் செய்து கொண்டார்கள் என்று எனக்கு எதுவும் தெரியாது. நான் சாட்சி கையொப்பம் மட்டும் தான் செய்தேன்.

**புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் புசாஆ.7 ல் மகேஷ்வரன் என்ற சாட்சி கையொப்பத்திற்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள அலைபேசி எண். 97906 81645 நான் உபயோகம் செய்து வருகிறேனா என்றால் மேற்படி எண்ணானது உபயோகத்தில் உள்ளது ஆனால் அதனை நானும், எனது நிறுவனமான Sri Vishnu Exports ன் மேலாளரும் உபயோகித்து வருகிறோம். நான் புகார்தாரரிடம் எத்தனை முறை அலைபேசியில் பேசியுள்ளேன் என்றால் ஒருமுறை பேசி உள்ளேன். என்ன பேசினேன் என்று எனக்கு ஞாபகம் இருக்கிறதா என்றால் குறிப்பிட்டு ஞாபகம் இல்லை, ஆனால் வியாபராம் சம்மந்தமாக பேசினேன், இவ்வழக்கு சம்மந்தமாக நான் எதுவும் பேசவில்லை.

2. கடந்த 15.12.2024 ம் தேதி புகார்தாரருக்கு நான் போன் செய்து வழக்கு காசோலை தொகையில் பாதியான 5 இலட்சம் ரூபாயை உடனே கொடுத்துவிடுவதாகவும் மீதமுள்ள 5 இலட்சம் ரூபாயை வியாபார ரீதியாக கழித்து கொள்வதாகவும் பேசினேன் என்றால் சரியல்ல. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் போட்டு காண்பிக்கப்பட்ட ஆடியோ பதிவில் உள்ள குரல் என்னுடையது அல்ல. நான் ஒருபோதும் புகார்தாரர் பிரேம்சுப்பாராஜுவிடம் போனில் தற்போது என்னிடம் போட்டு காண்பிக்கப்பட்ட சங்கதிகளை பேசியது இல்லை. **( சாட்சியிடம் போட்டு காண்பிக்கப்பட்ட ஆடியோ பதிவு அடங்கிய பென்டிரைவ் மற்றும் 63(4)(C) BSA– Part B சான்றிதழ் நீதிமன்ற பொறுப்பில் வழக்கு கோப்பில் வைக்கப்பட்டுள்ளது, சாட்சி மேற்படி பதிவுகளை மறுத்துள்ளதால் குறியீடு செய்யப்படவில்லை.)**

**மறுவிசாரணை**

**இல்லை**